1971 ஜூன் 21]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் தொடக்கத்திலேயே பல கேள்விகளுக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். இதெல்லாம், இருக்கும் நிதி நிலையைப் பொருத்துத் தான் ஆலோசிக்கப்பட வேண்டிய விஷயங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: புதிதாக ஓய்வு பெறுகிறவர்களுக்குப் பென்ஷன் நிர்ணயிக்கின்றபோது 9 மாதச் சம்பள சராசரி என்று போடப்படுவதாக அறிகிறேன். சாதாரணமாக லீவ் சம்பளம் கொடுப்பதென்றால் கடைசியாக வாங்கும் சம்பள அடிப்படையில் கொடுக்கும் நிலை இருக்கிறதா? அப்படியானால் காலதாமதம் கூட இல்லாமலிருக்கும் என்பதைப்பற்றி முதலமைச்சர் ஆராய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதையும் பரிசீலிக்கலாம்.

Tamil Nadu Text Book Society

* 8 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether this Government has formed a Corporation to publish text books for Standards III to XI; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ): பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் ஆன பாட நூல்களை வெளியிடுவதற்காகத் தமிழ் நாடு பாடநூற்கழகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது 1970-ம் வருடம் மார்ச் மாதம் 4-ம் தேதி அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 1 முதல் 10-ம் வகுப்பு முடிய தமிழ் (ஆழ்ந்த படிப்பு) 4 முதல் 10-ம் வகுப்பு முடிய ஆங்கிலம் (ஆழ்ந்த படிப்பு) 3 முதல் 10-ம் வகுப்பு முடிய கணக்கு ஆகிய பாடங்களுக்கு அரசுப் பாடநூல்கள் வெளி வந்துள்ளன. 1971-72-ம் ஆண்டில் 11-ம் வகுப்பிற்கான கணக்கு, வரலாறு, நிலவியல், அறிவியல் ஆகிய பாடங்களுக்குத் தமிழில் அரசுப் பாடநூல்கள் வெளிவரும்.

Dr. H. V. HANDE: Sir, is it a fact that there is no proper co-ordination between the Publishing Department and the Education Department and if so, will the Government come forward to tell us the concrete steps that they are going to take in regard to this matter so that students will get quality books in time and the price of books also will be less than what they have been before. Now the prices of books are high. Will the Government take all these factors into consideration and give us some indication as to how best they are going to solve this problem?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே சென்ற ஆண்டு புது புத்தகங்கள் வெளியிடுவதில் காலதாமதம் ஏற்பட்டது. அந்தச் சங்கடங்கள் ஏற்படாமல் இருப்பதற்காக இந்த ஆண்டு ஒரு மாதத்திற்கு முன்பே புத்தகங்கள் வெளியிடப் பட்டு விட்டன. அந்த புத்தகங்கள் அரசு புத்தக வெளியீட்டு

ஸ்தாபனத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளன. புத்தகத்தின் விலை ஏறுகிறது என்று சொன்னால், காகித விலை, அச்சுக்கூலி இவைகளெல்லாம் ஏறுகின்றன. பெரும்பாலும் புத்தகங்கள் வெளியிடுவது தனியார் அச்சகத்தில் கொடுத்து இருக்கிறோம். ஆகவே, அந்தந்த அச்சகங்களின் கூலி விகிதத்திற்குத் தகுந்தாற்போல், நாம் ஒப்பந்தம் பேசி, கொடுக்கும் கூலிக்குத் தகுந்தாற்போல், புத்தகத்தின் விலை இருக்கும். குறிப்பிட்ட புத்தகத்தின் விலை அதிகமாக இருக்கிறது என்று சொன்னால், அது பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், அரசாங்கம் அச்சடித்து வெளியிட்ட புத்தகங்களில் அதிகமான பிழைகள் இருந்தன என்றும், பல பக்கங்களில் அச்சு இல்லாமல் இருந்தது என்றும் புகார் வந்ததே, அதற்கு ஏதாவது பரிகாரம் காணப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சென்ற ஆண்டு அவசர அவசரமாக அச்சடிக்கப்பட்டதன் காரணமாக பிழை திருத்துவதில் கொஞ்சம் அவசரக்கோலம் ஏற்பட்டுவிட்டது. இந்த ஆண்டு அப்படி ஏற்படக் கூடாது என்பதற்காகப் பிழை திருத்துவது சரியாக கவனிக்கப்படும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. அச்சிடாத காகிதங்கள் நடுவே வந்துவிட்டன என்று சொன்னால், லட்சக் கணக்கான புத்தகங்கள் வெளியிடுகிறபோது அப்படிப்பட்ட பிழைகள் வரக்கூடும். அது மறுபடியும் சரிபார்க்கப்படாமல் வெளியிடப்படுவதால் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட குறைகள் இருந்தால் முறைப்படி தவிர்க்கப்படும்.

Dr. H. V. Hande: Sir, the Hon. Minister has stated that mostly these books are given to private persons or on contract or on tender basis. Will he enlighten the House as to the exact *modus operandi* adopted in regard to this matter and what is the percentage of books given to its own department and on contract?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இது பற்றிய முழுக்குறிப்பு என்னிடத்தில் இல்லை. ஆனால் அரசாங்க அச்சகத்தில் எவ்வளவு எடுத்துக்கொள்ளமுடியுமோ அவ்வளவு எடுத்துக் கொள்ளப்பட்டு அச்சடிக்கப்பட்டு வருகிறது. பெரும்பாலன புத்தகங்கள் அரசாங்க அச்சகத்தில் அச்சடிக்கப்படுகின்றன. அரசாங்க அச்சகத்தில் ஓய்வு இல்லாத காரணத்தால், குறிப்பிட்ட நேரத்திற்குள் புத்தகங்கள் அச்சடிக்க முடியாது என்ற காரணத்தால், புத்தகங்கள் வெளியிடுவது தனியார் அச்சகங்களுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அரசாங்கம் வெளியிடும் புத்தகங்களை வெளியிடுவதற்கென்று தனியாக ஒரு அச்சகம் ஒரு கோடி ரூபாய் செலவில் கிழக்கு ஜெர்மனியின் உதவியோடு அமைப்பதற்காக மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு செய்து கொண்டு இருக்கிறோம். அந்த அச்சகம் அமைக்கப்பட்ட பிறகு, அரசாங்கமே எல்லாப் புத்தகங்களையும் வெளியிடும்.

1971 ஜூன் 21]

அரசாங்க அச்சகத்தில், அரசு பொறுப்புள்ள வேறு பல அலுவல்கள் எடுத்துக் கொண்டு இருப்பதால்தான் தனியார் அச்சகத்திற்கு புத்தகங்கள் வெளியிடும் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. மலேச்சாமி : தலைவரவர்களே, தொடக்கப் பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் ஏழை மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகம் வழங்குவதற்கு அந்த நிறுவனம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1 முதல் 3-வது வகுப்பு வரையில் உள்ள மாணவர்களுக்குத்தான் இலவசமாகப் புத்தகங்கள் வழங்கும் ஏற்பாடு ஏற்கனவே இருந்து வருகிறது. அதற்கு மேல் இலவசமாகப் புத்தகம் வழங்குவதற்கு, அந்த நிறுவனத்திற்குக் கட்டுப்படியாக இருக்காது என்று கருதுகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, புத்தகங்களைத் தனிப்பட்ட அச்சகத்தில் அச்சடிப்பதால், கூலி, காகித விலை ஏறுவதால், புத்தகத்தின் விலையும் ஏறுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது மாதிரி ஏற்படாமல் இருப்பதற்காக, புத்தகத்தின் விலையை நிர்ணயித்துவிட்டு, மேற்கொண்டு ஆகும் செலவை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு, உதவி செய்யமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தனிப்பட்ட அச்சகத்தில் அடிப்பதால் விலையேறுகிறது என்பதல்ல. அரசாங்க அச்சகத்தின் கூலி விகிதப்படிதான், தனிப்பட்ட அச்சகத்திற்குக் கூலி தரப்படுகிறது. அதோடு, பரவலாக எல்லா அச்சகங்களுக்கும் கொடுத்தால் புத்தகம் விரைவில் வெளிவரும் என்பதால் இந்த முறை கையாளப்படுகிறது. ஒரு அச்சகத்திற்கு 1-2 புத்தகங்கள் என்ற அடிப்படையில் தரப்படுகிறது. அரசாங்க அச்சக இயக்குநர் அவர்களைக் கலந்து கொண்டுதான் இந்தக் கூலி நிர்ணயிக்கப்பட்டு கொடுக்கப்படுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Education, whether this Corporation publishes books for students of linguistic minorities also?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தக் குழு சிறுபான்மை மொழியுள்ள புத்தகங்களை அச்சடிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால், குறிப்பிட்ட சில ஆயிரக்கணக்கான புத்தகங்கள் தான் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் தேவைப்படுகின்றன. ஆகவே, தனியார் அச்சகத்தால் பிரசுரிக்கப்படும் புத்தகங்களைத் தான் வைத்து இருக்கிறோம். அதை நூல் பதிப்புக்கழகம் ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, வெளி நாட்டிலிருந்து நமது அரசாங்கத்திற்கு இலவசமாகக் காகிதம் தந்து இருக்கிறார்களே, அதன் காரணமாகப் புத்தகங்களின் விலையை மலிவாக நிர்ணயித்துக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, வெளிநாட்டிலிருந்து இலவசமாகக் காகிதம் கொடுக்கப்பட்டது ஒரு காலத்திலே, இன்று கொடுக்கப்படவில்லை. அப்படிக் கொடுக்கப் பட்ட காகிதத்தின் மூலமாகக் கிடைத்த தொகை மதிய உணவுக் கென்று கொடுத்து விட்டார்கள். இப்போது அதைப்போல் கொடுத்தால், மலிவான முறையில் புத்தகங்கள் கொடுக்க ஏற்பாடு செய்யலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், புத்தகங்கள் வெளியிடும் போதாவது, லாட்டரி சீட்டு அடிப்பதை நிறுத்தினால் அதிகமான புத்தகங்கள் அச்சடிக்க ஏதுவாக இருக்காதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: புத்தகங்களை வெளி அச்சகங்களில் அச்சடிக்கலாம். ஆனால் லாட்டரி சீட்டுக்களை வெளி அச்சகங்களுக்குக் கொடுக்க முடியாது. லாட்டரி சீட்டு அரசு அச்சகத்தில்தான் அச்சடிக்கப்பட வேண்டும்.

THIRU K. M. SUBRAMANIAM : Is the Hon. Minister for Education aware that during 1968–69 the Corporation of Madras distributed free books to all the poor students and subsequently the Government ordered that no books should be distributed to the students of the Corporation schools?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இது மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லையென்றாலும், இது பற்றி கார்ப்பரேஷன் முடிவு செய்யவேண்டும். கார்ப்பரேஷனின் நிதிநிலை அறிக்கையைப் பொறுத்து அவர்கள் முடிவு செய்வார்கள். முதலிலே, 3-வது வகுப்பு வரை கொடுத்தார்கள். பின்பு 8-வது வகுப்பு வரை கொடுத்தார்கள். அதற்குப் பிறகு நிதிநிலை சரியாக இல்லாததால்,—ஏற்கெனவே, பல்வேறு வகையில் அரசாங்கத்திடமிருந்து கடன் எதிர்பார்க்கிறது—இலவச புத்தகம் வழங்குவதை ஏற்றுக்கொண்டு போகமுடியாது. தனிக்கேள்வி போட்டால் முழு விவரம் சேகரித்துத் தரப்படும்.

Starting of industries in Dharmapuri District

*9 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any survey has been made in Dharmapuri district by the Government of Tamil Nadu regarding the availability of any raw materials for starting industries; and

(b) if so, the nature of industries that will be started?